ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஒ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2003), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2003) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நன்மாறன், பேசுங்கள்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையில் அரசானது பெட்ரோல், அதிவேக டீசல், வலுவற்ற டீசல் எண்ணெய், உயர்தரமான வெள்ளை நிற மண்ணெண்ணெய், சலவை இயந்திரங்கள் ஆகியவற்றின்மீது விற்பனை வரியை உயர்த்துவதெனவும் மற்றும் தொலைபேசிகளின் மீதும், செல்லுமிடத் தொலைபேசிகள் மீதும், Bharath Sanchar Nigam Limited மற்றும் பிற தனியார் தொலைபேசி நிறுவனங்கள் வசூலிக்கும் தொலைபேசி வாடகைகள் மீதும் விற்பனை வரியை விதிப்பதென அறிவித்திருந்தபோதே, நாங்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறோம். அதே கருத்தினை இப்போதும் தெரிவித்து, என்னுடைய ஆட்சேபணையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 8-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பெட்ரோலைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருந்த 29.5 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதம்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கேரள மாநிலத்தில் 44 சதவிகிதமும், ஆந்திர மாநிலத்திலே 30.55 விழுக்காடும் இப்போது இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். அதேபோன்று அதிவேக டீசல் எண்ணெய் 23.1 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதம்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. அண்டையில் இருக்கிற கேரள மாநிலத்தினுடைய விழுக்காடு 40. மகாராஷ்டிரா மாநிலத்திலே 34 விழுக்காடு இருக்கிறது. அதுமட்டுமல்ல. ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் என்ற அளவிலே மகாராஷ்டிரா மாநிலத்திலே இன்று வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் வலுவற்ற டீசல் எண்ணெயைப் பொறுத்தவரையில், 21.9 விழுக்காடு என்றிருந்ததை 25 விழுக்காடாக இப்போது வரி உயர்த்தப்பட்டு இருக்கிறது. இதிலும் மத்திய அரசு இன்று ஒவ்வொரு லிட்டருக்கும் 1 ரூபாய் என்று இருந்ததை 1.10 சதவிகிதம் என்று உயர்த்தியபோதும், தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில், குறைவான அளவுதான் வரியை உயர்த்தி இருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறேன். அதுமட்டுமல்லாமல் சலவை இயந்திரத்தில் Washing Machine-ல் 12 சதவீதம் என்பதை 12.5 சதவீதம் என்று தான் தமிழக அரசு வணிக வரியை உயர்த்தியிருக்கிறது. குஜராத் மாநிலத்திலே 17 சதவீதம், மகாராஷ்டிரா மாநிலத்திலே 13 சதவீதம், பாண்டிச்சேரி மாநிலத்திலே 12 சதவீதம், கர்நாடக மாநிலத்திலே 12 சதவீதம், ஆந்திர மாநிலத்திலே 12 சதவீதமாக இருக்கின்றது என்பதைச் சுட்டிக் காண்பித்து, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமாய் கோருகிறேன்.

பிற்பகல் 5-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' எனக. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.